**Dated : 18.02.2026**

**O.S.No. 365/2022**

**PW.1 – திரு. முனிரத்தினம்**

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

நான் எதற்காக இந்த வழக்கினை தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் பணத்தை கேட்டு தாக்கல் செய்திருக்கிறேன். பிரதிவாதிகள் குமார் மற்றும் புவனேஸ்வரியை எனக்கு தெரியுமா என்றால் 2015ம் ஆண்டிலிருந்தே தெரியும். நான் அவர்களுக்கு கடன் கொடுத்ததாக சொல்கிறேன் எந்த தேதியில் கடன் கொடுத்தேன் என்றால் 09.12.2019 தேதி கடன் கொடுத்தேன். கடன் கொடுத்ததற்காக நான் என்ன ஆவணம் அவர்களிடமிருந்து பெற்றுக்கொண்டேன் என்றால் இரண்டு புரோநோட்டுக்கள் வாங்கிக்கொண்டேன். அந்த இரண்டு புரோநோட்டுக்களிலும் எவ்வளவு தொகை பூர்த்தி செய்யப்பட்டிருந்தது என்றால் இரண்டு புரோநோட்டுக்களிலும் தலா ரூ.10,00,000/- ஆக பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. 09.12.2019 தேதிக்கு முன்னிட்டு கடன் வாங்கிக்கொண்டதாக பாண்டு பத்திரம் ஏதேனும் ஏற்படுத்திக்கொண்டேனா என்றால் இல்லை. நான் கடன் கொடுத்ததற்காக புரோநோட்டு எழுதி வாங்கிக்கொண்டதாக சொல்கிறேன் எந்த தேதியில், யார் முன்னிலையில், எந்த இடத்தில் வைத்து, எந்த சாட்சிகள் முன்னிலையில் புரோநோட்டு எழுதி வாங்கினேன் என்றால் நான் குடியிருக்கும் வீட்டில் வைத்து புரோநோட்டு எழுதி வாங்கினேன். அதில் சாட்சி கையொப்பமிட்டவர்கள் யார் யார் என்றால் அமுதா மற்றும் ஜெயபால்.

**வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்பட்டது.**

Taken down by me in open Court interpreted/read to the witness and acknowledged by him/her to be correct.

LATHA V R Digitally signed by LATHA V R

Principal District Judge,

Krishnagiri.